**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**

**முன்னிலை: திரு.S. முகமது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 04-ஆம் நாள் புதன்கிழமை**

**இடைக்கால மனு எண்.1/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.1/2023**

1. அழகு
2. சுரேஷ்கண்ணன் ... **மனுதாரர்கள்/வாதிகள்**

... எதிர் ...

1. புஷ்பவள்ளி
2. அழகு க/பெ.முத்துச்சாமி
3. அழகு த/பெ.வெங்கு
4. காட்டுராஜா .... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு என்முன்பு 04.08.2024 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் வழக்கறிஞர் திரு.R.லட்சுமணன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 6 ரூல். 17 பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து

வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. <u>மனு அபிடவிட்டின் சுருக்கம்:-</u>**

இவ்வழக்கில் அசல் பிராதில் பக்கம் எண்.1ல் ஷார்ட் காஸ் டைட்டிலிலும்,, பக்கம் எண்.3ல் லாங் காஸ் டைட்டிலிலும், 5ம் பிரதிவாதியின் பெயரான பூமிநாதன் என்பதை வெங்குச்சாமி என்று அசல் பிராதினை சீர்திருத்தம் செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்பதால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கறிஞர் தன்னுடைய தரப்பினர்கள் தரப்பில் எவ்வித தகவலையும் தெரிவிக்காததால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மறுப்புரை இல்லை என முடிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மறுப்புரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4**. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் இல்லை.

**5.** தீர்வு. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**6. <u>இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-</u>**

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மறுப்புரை இல்லை என

தெரிவிக்கப்பட்டது. இம்மனுவை அனுமதிப்பதால் இருதரப்பினருக்கும் யாருக்கும் பாதிப்பில்லை. நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு செப்டம்பர் 04ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-திரு.S.முகம்மது யூசுப் நவாஸ், 04.09.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை
**<u>ஏதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

ஒம்/-திரு.S.முகம்மது யூசுப் நவாஸ், 04.09.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

/உண்மை நகல்/

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

District Munsif Court

Manamadurai

IA 1/2023

in

OS 1/2023

Order

04.09.2024